**சுருக்கம்**

பொதுப்பணித்துறை – கட்டடங்கள் – நவீன புதிய கலைவாணர் அரங்கம் ரூ.60.86 கோடி மதிப்பீட்டில் கட்டுதல் – நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணி (ஒய்2) த்துறை**

அரசு ஆணை (நிலை) எண். 3 நாள்: 05.01.2011

மார்கழி 21,
திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1) அரசாணை (நிலை) எண். 316, பொதுப்பணி (எச்1)த்துறை, நாள் 25.10.2008.
2) அரசாணை (நிலை) எண். 81, பொதுப்பணி (எச்1)த்துறை, நாள் 21.05.2009.
3) தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித் துறை, சென்னை–5, கடித எண். உசெபொ/டி10/பி/15836/ 2010, நாள் 25.10.2010.

----

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை, ஒமந்தூரார் அரசினர் தோட்டத்தில் தமிழ்நாடு புதிய சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகத்தின் பிளாக்–A கட்டிடம் கட்டுவதற்கு ரூ.425.57 கோடி மதிப்பீட்டிற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டது. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு புதிய சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகத்தின் பிளாக்–B கட்டிடம் கட்டுவதற்கு ரூ.279.564 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. தமிழ்நாடு புதிய சட்டமன்றப் பேரவை வளாகம் கட்டுவதற்கு வசதியாக பழைய கலைவாணர் அரங்க கட்டிடம் இடிக்கப்பட்டதால், பொது மக்கள் பயன்பெறும் வகையில் கலைவாணர் அரங்கம் நவீன கூட்ட அரங்கமாக சுமார் 1500 நபர்கள் அமரக்கூடிய வகையில் ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19.04.2010 அன்று நடைபெற்ற 2010–2011–ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையின்போது அறிவித்தார்கள். 30.09.2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கட்டடப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தின் போது புதிய கலைவாணர் அரங்கம் பணியை விரைவுப்படுத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அதற்கேற்ப அறிவிப்பில், வெளியிடப்பட்ட 1500 நபர்கள் அமரக்கூடிய வசதிக்கு மாறாக

/த.பி.பா./

விதிமுறைகளின்படி பரப்பளவைக் கருத்தில் கொண்டு சுமார் 1206 நபர்கள் அமரக்கூடிய வகையில் கீழ்க்குறிப்பிட்ட வசதிகளுடன் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய நவீன கலைவாணர் அரங்கம் கட்டுவதற்கு திருவாளர்கள் ஜி.எம்.பி. இண்டர்நேஷனல், ஜெர்மனி என்ற கட்டடக்கலை நிறுவனத்தால் ரூ.60.86 கோடிக்கு விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்று தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை அவர்கள் தெரிவித்துள்ளார்:—

(1) உள்வேலைப்பாடுகள் (Interiors)
(2) நாற்காலி மற்றும் மேசை வசதிகள்
(3) பொது அழைப்பு அமைப்பு ஏற்படுத்துதல்
(4) எதிரொலி சார்ந்த அமைப்பு (Acoustics) ஏற்படுத்துதல்
(5) பெயர் பலகைகள் அமைத்தல்
(6) சுற்றியுள்ள நிலப்பரப்பை அழகுப்படுத்துதல் (Landscaping)
(7) தோட்டம் அமைத்தல்
(8) ஒளி மின் விளக்கு வசதிகள்
(9) மின்தூக்கி வசதி ஏற்படுத்துதல்
(10) 33 கே.வி.ஏ. HT PFCஅமைப்பு ஏற்படுத்துதல்
(11) டீசல் ஜெனரேட்டர் அமைப்பு மற்றும் டீசல் ஜெனரேட்டர் எக்ஸாஸ்ட் அமைப்பு ஏற்படுத்துதல்.

3. 30.09.2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற கட்டிடப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தின் அடிப்படையில், அரசின் நிர்வாக ஒப்புதலை எதிர்நோக்கி, கண்காணிப்புப் பொறியாளர், கட்டிட கட்டுமான வட்டம், தமிழ்நாடு புதிய சட்டப்பேரவை வளாகம், அவர்கள் 26.11.2010 இறுதி நாளாகக் கொண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் என்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை அவர்கள் தெரிவித்துள்ளார்.

4. சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் மேலே பத்தி 2ல் குறிப்பிட்டுள்ளவாறு புதிய நவீன கலைவாணர் அரங்கம் கட்டுவதற்கு (1) ரூ.60.86 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறும், (2) மேற்கூறப்பட்ட பணிகளுக்காக அரசின் நிர்வாக ஒப்புதலை எதிர்நோக்கி 26.11.2010—ஐ இறுதி நாளாகக் கொண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு அழைப்பு விடுத்த கண்காணிப்பு பொறியாளர், கட்டட கட்டுமான வட்டம், தமிழ்நாடு சட்டப்பேரவை வளாகம் அவர்களின் செயலுக்கும் மற்றும் (3) அரசின் நிர்வாக ஒப்புதலுக்கு முன் தொழில்நுட்ப அனுமதி வழங்கிய செயலுக்கும் பின்னேற்பு ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை அவர்கள் அரசைக் கோரியுள்ளார்.

5. அரசின் கவனமான பரிசீலனைக்குப்பின், தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை அவர்களின் கருத்துருவை ஏற்று, சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய நவீன கலைவாணர் அரங்கம் கட்ட ரூ.60.86 கோடி (ரூபாய் அறுபது கோடியே எண்பத்து ஆறு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், அரசின் நிர்வாக ஒப்புதலை எதிர்நோக்கி 26.11.2010—ஐ இறுதி

நாளாகக் கொண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு அழைப்பு விடுத்த கண்காணிப்பு பொறியாளர், கட்டட கட்டுமான வட்டம், தமிழ்நாடு சட்டப்பேரவை வளாகம் அவர்களின் செயலுக்கும், அரசின் நிர்வாக ஒப்புதலுக்கு முன் தொழில்நுட்ப அனுமதி வழங்கிய செயலுக்கும் பின்னேற்பும் அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:—

> “4220 – செய்தி, விளம்பரம் குறித்த மூலதனச் செலவு – 60 ஏனையவை – 101 கட்டடங்கள் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA கட்டடங்கள் – 16 பெரும் பணிகள் (த.தொ.கு. 4220 60 101 JA 1608).”

7. மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் “புதுத் துணைப் பணிகள் (New Instrument of Service)” குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை பெறும் வரையில், இத்திட்டத்திற்கான ஆரம்பச் செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு—செலவு பொது—1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து நடப்பு நிதியாண்டிற்கு தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு—செலவு பொது—1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை, சென்னை—5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலும் இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, இவ்வாண்டின் துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates) சேர்த்திட, இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில் பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (வரவு—செலவு பொது—1)த் துறைக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை, சென்னை—5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை, நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 73410/PW.I/2011, நாள் 03.01.2011 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1690 (ஆயிரத்து அறுநூற்று தொண்ணூறு) ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கி. தனவேல்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித் துறை, சென்னை—5.
கண்காணிப்புப் பொறியாளர், கட்டட கட்டுமான வட்டம், பொதுப்பணித்துறை,
தமிழ்நாடு புதிய சட்டப் பேரவைச் செயலக வளாகம் (பிளாக்-A), சென்னை —2.

/த.பி.பா./

முதன்மை மாநில கணக்காயர் (A&E), சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர்,
சென்னை–18 (பெயரில்).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், எழும்பூர், சென்னை–8.

<u>நகல்:–</u>

முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
நிதியமைச்சரின் கூடுதல் செயலாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
பொதுப்பணித்துறை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
பொதுப்பணித்துறை சிறப்புச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
பொதுப்பணி (ஜி / எச்) த்துறை, சென்னை–9.
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, சென்னை–9.
நிதி (பொ.ப. I / வ.செ. பொது I / வ.செ. பொது II) த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**பிரிவு அலுவலர்**